(ஆ) சந்திகாரில் நடக்கவிருக்கும் மத்திய-மாநில உறவு மாநாட்டில் தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும் டெல்லியில் நடந்த தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மிக முக்கியமான பிரச்னை-மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் டெல்லிக்குச் சென்றுவிட்டு இன்றைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மத்திய மாநில உறவைப்பற்றி பேசிவிட்டு வந்திருப்பதாகவும், அதுபற்றி சந்திகாரிலே நடைபெறக்கூடிய மாநாட்டிலே கலந்துகொள்ள ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இன்றைக்குத் தகவல் வந்திருக்கிறது. இன்றைக்கு முக்கியமான பிரச்னையாக இது இருப்பதாலே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அவைக்கும் சில தகவல்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, என்.டி.சி. கூட்டம் நாடு பூராவும் முக்கியத்துவம் வாய்ந்தது, நம்முடைய தமிழகத்தின் அபிவிருத்தியும் சம்பந்தப்பட்டது. அதிலே, முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே, நேரடியாக சம்பந்தப்பட்ட முடிவுகளின் இம்பாக்ட் நமக்கு இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக ஒரு அறிக்கை இந்த ஹவுசிலே வைக்கவேண்டும். பார்லிமெண்டிலே இதுபற்றி பிரதமர் ஒரு அறிக்கை வைத்திருக்கிறார். அந்த ஹவுசிலே அவர் வைத்திருக்கிறார், சப்மிட் பண்ணினார். ஆகவே, இங்கே, முதலமைச்சரோ, நிதியமைச்சரோ, அவர்களுக்குள்ளே யாராவது ஒருவர் ஒரு ஸ்டேட்மென்ட்—இதுபற்றி கொடுப்பது—நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(பதில் இல்லை.)

2. ஒழுங்குப்பிரச்னைகள்.

(ஆ) பேரவையில் ஒரு மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னையின்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதியன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை என்று கீழ்க்கண்ட பொருள் பற்றிக் குறிப்பிட்டார்:—

''1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழில், 'தி.மு.க. ஆட்சியில் கோவில் ஊழல்கள்—சட்டசபையில் எம்.ஜி.ஆர். அறிக்கை' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்ட செய்தி குறித்து.